வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 19.09.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாட்டின் வளர்ச்சிக்கு, **நீலப் பொருளாதாரம்**, மிக முக்கியமானது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பெண்களின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் **அதிகாரப் பங்கேற்பை** மேம்படுத்த, மத்திய அரசு, விரிவான கொள்கை ஒன்றை கடைபிடித்து வருகிறது.

**அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால்**, குறிப்பாக, மோட்டார் வாகன உற்பத்தித் துறையில், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.

புதுச்சேரியில், **இளநிலை** எழுத்தர் பணியிடங்களுக்கான காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த 19 பேருக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இன்று, பணி ஆணை வழங்கினார்.

---

மோடி நீலப் பொருளாதாரம் (11)

நாட்டின் வளம், பலம், மற்றும், நீடித்த தன்மையை ஒருங்கிணைக்கும் வகையிலான நீலப் பொருளாதாரம், இந்தியாவின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். நீலப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அரசு அமல்படுத்தி உள்ள சாகர் மாலா, ஆழ்கடல் இயக்கம் உள்ளிட்ட பல்வேறு முன் முயற்சிகள் குறித்து, மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், சமூக ஊடகத்தில்

வெளியிட்டுள்ள கட்டுரைக்கான பதிலில் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார். கடல் வளத்தின் பயன்பாடு மூலம், சமூகங்களின் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்தவும், புதுமையாக்கத்தை தூண்டவும், உலக அளவிலான பெருங்கடல் நிர்வாகத்தில் இந்தியாவின் தலைமைத்துவத்தை வலுப்படுத்தவும் ஏதுவாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

--------------------------------

*மோடி-போஷன்* (11)

திறன்மிகு அங்கன்வாடி இயக்கம், மற்றும். 2ஆம் கட்ட ஊட்டச்சத்து இயக்கம் குறித்து, மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். குழந்தைகள், வளர் இளம் பெண்கள், மற்றும், கருவுற்ற தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலவரத்தை மேம்படுத்துவதற்கான அரசின் முக்கிய முன் முயற்சிகளாக இத்திட்டங்கள் திகழ்வதாக அவர் கூறியுள்ளார். இத்திட்டங்களின் கீழ், நாடு முழுவதும் லட்சக்கணக்கிலான பயனாளிகள், விரிவான அங்கன்வாடி கட்டமைப்பு மூலம் உதவிகளை பெற்று வருவதாகவும், லட்சக் கணக்கிலான குழந்தைகளின் எதிர்காலத்தை இத்திட்டங்கள் வடிவமைத்து வருவதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

--------------------------------

*சேவா சப்தாஹ்-மகளிர் அதிகாரம்*-1 (7)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை-நல்லாட்சி** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. நாடு முழுவதும் மகளிர் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு முன்முயற்சிகள் குறித்து, இன்று, **சேவைத் திருவிழா** என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம். ..........

(வாய்ஸ்)

*சேவா சப்தாஹ்- மகளிர் அதிகாரம் - 2 (15)*

(வாய்ஸ்)

பெண்களின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும், அந்தந்த கட்டத்திற்கு ஏற்ற வகையில், சமூக, பொருளாதார, சட்ட, மற்றும், அரசியல் அதிகாரப் பங்கேற்பை மேம்படுத்த, பிரதமர் திரு. நரேந்தி ரமோடி தலைமையிலான அரசு கடந்த 11 ஆண்டுகளில், விரிவான கொள்கை ஒன்றை கடைபிடித்து வருகிறது. இளம் பெண்கள், வயதான பெண்கள், நகர்ப்புற பெண்கள், கிராமப்புற பெண்கள் போன்ற வித்தியாசமின்றி எல்லா பெண்களும், கண்ணியம், பாதுகாப்பு, மற்றும், சுயசார்புடன் வாழ்வதை உறுதிப் படுத்துவதற்கான தேசிய இயக்கமாகவே, நாரிசக்தி இயக்கம் மேம்பட்டுள்ளது. மகளிர் மேம்பாடு என்பதில் இருந்து, மகளிர் தலைமையிலான மேம்பாடு என்பதாக, அரசின் கொள்கை மாறி உள்ளது. அரசியல் சாசன ரீதியில், பெண்களுக்கு அரசு வழங்கி உள்ள பாதுகாப்பும், வன்முறை, மற்றும் பாகுபாட்டிற்கு எதிரான அரசின் முக்கிய சட்டங்களும், இந்த கொள்கை மாற்றத்திற்கு எடுத்துக் காட்டாகவே திகழ்கின்றன. பிரதமர் திரு. நரேந்திரமோடி, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஹரியானாவில், பெண்களுக்கான பீமா சகி திட்டத்தை தொடக்கி வைத்து பேசுகையில்……

(வாய்ஸ்-மோடி)

*சேவா சப்தாஹ்- மகளிர் அதிகாரம் -3 (9)*

**பெண் குழந்தைகளை பாதுகாப்போம்-பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்** திட்டத்தினால், விரும்பத்தக்க பல்வேறு பலன்கள் ஏற்பட்டுள்ளன. 2014-15ஆம் ஆண்டில், **ஆயிரம் ஆண்களுக்கு** 918ஆக இருந்த பாலின விகிதம், தற்போது, 930ஆக அதிகரித்துள்ளது.

2015ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் தொடக்கப்பட்ட செல்வ மகள் சேமிப்புத் திட்டத்தினால், நாடு முழுவதும், லட்சக்கணக்கிலான பெண்

குழந்தைகளுக்கு, அதிகாரப் பங்கேற்பும், வாழ்க்கை பற்றிய நம்பிக்கையும் கிடைத்துள்ளது. இத்திட்டம் குறித்து புதுச்சேரி மேட்டுப்பாளையம் பகுதியைச் சேர்ந்த பயனாளி புவனேஸ்வரி எமது செய்தியாளரிடம் பேசுகையில்.....

**(வாய்ஸ்-புவனேஸ்வரி)**

*சேவா சப்தாஹ்- மகளிர் அதிகாரம் -4 (8)*

மகளிர் சுயஉதவிக் குழுவினர், நீடித்த அடிப்படையில், ஆண்டுக்கு 1 லட்சம் ரூபாயாவது வருமானம் ஈட்டுவதை உறுதிப்படுத்தும் வகையில், **லாக்பதி தீதி** திட்டத்தை மத்திய அரசு செயலப்டுத்தி வருகிறது.

இவ்வாறாக, **அடித்தட்டு நிலை** முதல், பாதுகாப்புப் படைகள், மற்றும், விமானப் போக்குவரத்து வரை எல்லாத் துறைகளிலும், பெண்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, நாட்டில், அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த வளர்ச்சியை உறுதிப்படுத்துவதில், முன் நின்று முக்கிய பங்களித்து வருவது, பெருமைக்குரியதாகும்.

---------------------------------

*ஜிஎஸ்டி- மோட்டார் வாகனம் -1 (8)*

பிரதமர் திரு நரேந்திர மோடி இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை, டெல்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து அறிவித்தார். சாதாரண மக்களின் வாழ்வை எளிதாக்கும் வகையில் பல்வேறு துறைகளுக்கான வரி குறைப்பை, இம்மாதம் 3-ஆம் தேதி ஜிஎஸ்டி சபை அங்கீகரித்து, பிரதமரின் தொலை நோக்கு பார்வையை நிறைவேற்றியது. இதில் குறிப்பாக மோட்டார் வாகன உற்பத்தித் துறைக்கான, ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் குறித்து இன்றைய தொகுப்பில் பார்க்கலாம்....

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி-மோட்டார் வாகனம் 2 (13)*

**(வாய்ஸ்)**

சாதாரண மக்களுக்கு மிகப் பெரிய ஆறுதல் அளிக்கும் வகையில், ஜிஎஸ்டி சபை, மோட்டார் வாகன உற்பத்தித் துறைக்கும், கணிசமான அளவில் வரிக்குறைப்பு அறிவித்துள்ளது. இத்துறை, தனது உற்பத்தி, விற்பனை, பராமரிப்பு, மற்றும், நிதிசார் பணிகள் மூலம், நாடு முழுவதும் 3.5 கோடி பேருக்கு, நேரடியாகவோ, அல்லது, மறைமுகமாகவே வேலை வாய்ப்பு அளிக்கிறது. வரிக் குறைப்பு காரணமாக, இத்துறையில் சந்தைத் தேவை அதிகரிப்பதால், மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் மட்டுமின்றி, டயர், டியூப், பேட்டரி, கண்ணாடி, பிளாஸ்டிக், இரும்பு-எஃகு, எலக்ட்ரானிக்ஸ் உட்பட. பல்வேறு சார்புத் துறைகளும், பெருமளவில் பயன்பெறும். வரிக் குறைப்பினால், பழைய மோட்டார் வாகனங்களுக்கு பதிலாக, எரிபொருள் திறன் அதிகமுள்ள புதிய வாகனங்களை வாங்கும் பழக்கம் ஊக்கம்பெற்று, சுற்றுச் சூழல் மாசுபாடு குறையவும், பசுமைப் போக்குவரத்து மேம்படவும் ஏதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------------

*புதுச்சேரி நியமனம்* (11)

புதுச்சேரியில், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் கீழ்,இளநிலை எழுத்தர் பணியிடங்களுக்கு, போட்டித் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, காத்திருப்போர் பட்டியலில் வைக்கப் பட்டவர்களில் 19 பேருக்கு, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி பணி ஆணை வழங்கினார். கண்பார்வை அற்றவர்களுக்கு பிரத்யேகமாக ஒதுக்கப்பட்ட, திறன் பெற்றிராத அலுவலக ஊழியர் பணியிடங்களுக்கு, செய்முறைத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 13 பேருக்கும், முதலமைச்சர் பணி ஆணைகளை வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார், மற்றும் உயர்நிலை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

---------------------------------

*புதுச்சேரி செல்வம் (5)*

அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து சார்பில், தவளக்குப்பத்தில் இன்று நடைபெற்ற, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மற்றும், தூய்மைப் பணிகள் விழிப்புணர்வு பேரணியை, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் கொடியசைத்து தொடக்கி வைத்தார். கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்கள், மற்றும், பள்ளி மாணவ-மாணவிகள் இதில் கலந்து கொண்டனர்.

--------------------------------

*பிரசார் பாரதி* (7)

பிரசார் பாரதி தலைவர் திரு. நவநீத் குமார் சேகல், இன்று, ஹைதராபாத் ஆகாஷ்வாணி நிலையத்தில், ஒலிபரப்பு செயல்பாடுகளை மறு ஆய்வு செய்தார். மண்டல செய்திப் பிரிவில், ஊழியர்களிடையே அவர் பேசுகையில், செய்திகளை தொடர்ச்சியான முறையில் உடனுக்குடன் சேகரித்து, தாமதமின்றி மக்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். பிரசார் பாரதி தலைவர் நாளை, ஹைதராபாத் தூர்தர்ஷன் நிலையத்திலும் ஆய்வு மேற்கொள்கிறார்.

--------------------------------

*தணிக்கை* (13)

நாட்டின் பொது நிதி மேலாண்மைக் கட்டமைப்பை டிஜிட்டல் மயமாக்கி, தணிக்கைத் தரம், மற்றும், நேர சேமிப்பை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை, மத்திய அரசின் தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி திரு. சஞ்சய் மூர்த்தி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், மாநில நிதித் துறை செயலர்களுக்கு இடையிலான, 2ஆவது வருடாந்திர மாநாட்டில் உரையாற்றிய அவர், டிஜிட்டல் வசதிகள் மூலம், தொலை நிலை தணிக்கை நடைமுறைகளை அமல்படுத்துதல், மாநில பொதுத் துறை நிறுவனங்கள், மற்றும் சுயாட்சி அமைப்புகளின் கணக்கு நடைமுறைகளை வலுப்படுத்துதல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மீதான நிதி மேற்பார்வையை மேம்படுத்துதல் உள்ளிட்ட அம்சங்களையும்

வலியுறுத்தினார். 2022-23ஆம் ஆண்டில, மாநில அரசுகளின் நிதி நிலவரங்கள் பற்றிய அறிக்கை ஒன்றையும் திரு. சஞ்சய் மூர்த்தி இந்நிகழ்ச்சியின் போது வெளியிட்டார்.

---------------------------------

கிரிக்கெட் (6)

ஆசியக் கோப்பைக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், அபுதாபியில் இன்று இரவு நடைபெறும் ஏ-பிரிவு போட்டியில், இந்தியா-ஓமன் அணிகள் மோத உள்ளன. இத்தொடரில் இந்தியா ஏற்கனவே, சூப்பர்–4 நிலைக்கு தகுதி பெற்றுள்ளது. இதற்கிடையில், இலங்கை-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையே, நேற்று நடைபெற்ற பி-பிரிவு போட்டியில், இலங்கை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

---------------------------------

*வானிலை (10)*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்றைய தினம், தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திருவண்ணாமலை, காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட மாவட்டங்களில், ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 25-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, விழுப்புரத்தில் 19 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், பத்துக்கண்ணு பகுதியில் 10 செ.மீ, மற்றும், பாகூரில் 9 செ.மீ மழை பெய்துள்ளது. காரைக்காலில், 6 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------------------

*ராஜ்நாத் சிங்* (12)

1965ஆம் ஆண்டு, இந்தோ-பாக் போரின் 60 ஆண்டுகளை ஒட்டி, இப்போரில் பங்கேற்ற முதுபெரும் ராணுவ வீரர்களை கவுரவிக்கும் வகையில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். இந்திய பாதுகாப்புப் படைகளின் துணிச்சலும், ஒருங்கிணைப்பான செயல்பாடுகளும் இணைந்து, போர் வெற்றிகளை ஒரு பழக்கமாகவே மாற்றி இருப்பதாக அவர் கூறினார். ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது, எதிரிகளை திருப்பித் தாக்குவதற்கான இந்தியாவின் வலுவை, பாதுகாப்புப் படையினர் நிரூபித்து இருப்பதாக அவர் தெரிவித்தார். படை வீரர்களுக்கு, நிதி உட்பட எந்தவொரு அடிப்படை ஆதாரங்களுக்கும், எந்தக் குறையும் இல்லாத நிலையை பராமரிக்க அரசு உறுதிப் பூண்டுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறினார்.

---------------------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாட்டின் வளர்ச்சிக்கு, **நீலப் பொருளாதாரம்**, மிக முக்கியமானது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பெண்களின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் **அதிகாரப் பங்கேற்பை** மேம்படுத்த, மத்திய அரசு, விரிவான கொள்கை ஒன்றை கடைபிடித்து வருகிறது.

**அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால்**, குறிப்பாக, மோட்டார் வாகன உற்பத்தித் துறையில், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.

புதுச்சேரியில், **இளநிலை எழுத்தர்** பணியிடங்களுக்கான காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த 19 பேருக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, இன்று, பணி ஆணை வழங்கினார்.